பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 2 (18—9—72) திங்கள் — வெளியூர்: புரட்டாசி 3 (19—9—72) செவ்வாய் [இதழ்: 80

## பொறுப்புமிகு தொண்டு

சென்னை, செப். 18—

"அண்ணா அவர்கள் வங்கக் கடலோரத்தில் நீங்காத் துயில் கொண்டிருக்கிறார்.

"அவருடைய உடல் அங்கே புதைக்கப்பட்டிருக்கலாம்; ஆனால் அவருடைய கொள்கைகள் -- இலட்சியங்கள்--வழிமுறைகள் -- அரசியல் நெறி முறைகள் நம்மிடையே விடப்பட்டிருக்கின்றன; அவைகளைக் கட்டிக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புமிகு தொண்டிற்கு நம்மை நாமே ஒப்படைத்துக்கொண்டிருக்கிறோம்."

--கழகத் தலைவர் கலைஞர்

# கழகத் தலைவர் கலைஞர் சூளுரை

## அண்ணன் வழி நிற்போம்-- உரிமைக்கு இறுதிவரையில் போராடியே தீருவோம்

### மாநில சுயாட்சி பற்றி விவாதிக்க மத்திய அரசு நாள் குறிப்பிடுவதுதான் சாலச்சிறந்தது

### அண்ணா பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் தெளிவுரை

சென்னை, செப். 18—

"ஏழைகளால்--ஏழைகளுக்காக--ஏழைகளைக் கொண்டு நடத்தப்படுவது நான் கழக அரசு! கழகத்தை வளர்க்க அண்ணன் பட்ட பாடு-- அண்ணனுக்குப் பின்னால் அவர் தம்பிமார்கள் பட்ட பாடு--நாம் சிந்திய இரத்தம்--வடித்த வியர்வை--இவைகளையெல்லாம் மறந்துவிட இயலாது; எனவே ஒரு முறை அவைகளைத் திரும்பிப் பார்த்து நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

"அண்ணன் வழி நின்று அயராது உழைத்து--மாநில சுயாட்சி பெற--அதன்மீது நின்று நமது உரிமைககாக இறுதிவரையில் போராடுவோம்; அதற்கான விளக்கங்களை எடுத்துவைப்போம்; நாடெங்கும சுற்றி மக்களிடத்திலே அதனைப் பரப்புவோம்; அதற்கு எதிரி யாராக இருந்தாலும்--அவர்கள் உரிமைகளுக்கு எதிரிகள்; உண்மையான சுதந்தரத்துக்கு எதிரிகள்; இந்தியப் பாதுகாப்புக்கு எதிரிகள்!

'நாம் கேட்பது பிரிவினையல்ல--உரிமை; சுயாட்சி கேட்கிறோம்--அதிக அதிகாரங்கள் கேட்கிறோம்--அதோடு இன்னொன்றையும் சேர்த்துக் கேட்கிறோம்; அதிகாரங்கள் வேண்டும்--அந்த அதிகாரங்களில் தலையீடு இருக்கக்கூடாது--அதுதான் சுயாட்சி!

"அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று வினோபா கூறுகிறார்-- ஜெயப்பிரகாசர் ஒத்துக்கொண்டிருக்கிறார்; பண்டித நேருவே மாநில சுயாட்சிக் கொள்கையை ஒத்துக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்.

'அதிகாரங்களில் தலையீடு இல்லாமல் இருப்பதற்குப் பெயர்தான் மாநில சுயாட்சி; அந்த மாநில சுயாட்சி தமிழகத்துக்கு மட்டும் தேவையான ஒன்றல்ல; இந்தியப் பூபாகத்திலே இருக்கின்ற எல்லா மாநிலங்களுக்கும் தேவை; அந்தத் தேவையை உணர்ந்து, மத்தியில் இருக்கின்றவர்கள் அது பற்றி விவாதிக்க நாள் குறிப்பிடுவதுதான் சாலச்சிறந்தது என்பதை மட்டும் இந்த நன்னாளில் குறிப்பிட்டு, 'அண்ணாவின் புகழ் ஓங்குக--அண்ணாவின் வழியில் அயராது உழைப்போம்' என்ற சூளுரையை மேற்கொண்டு பணியாற்றுவோம்"

—என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், நேற்று திருவல்லிக்கேணி கடற்கரையில் -- சீரணி அரங்கில் ஐந்து இலட்சம் பேர் திரண்டிருந்த அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளிவுற விளக்கிச் சூளுரை மேற்கொண்டார்.

### கூட்ட நிகழ்ச்சிகள்

சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம், கடற்கரையிலுள்ள சீரணி அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஐந்து இலட்சம் பேர் திரண்டிருந்தனர்.

கூட்டத் துவக்கத்தில் திரைப்பட இசையமைப்பாளர் எம். எஸ். விசுவநாதன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

திரைப்படப் பாடகர்களான டி. எம். சௌந்தரராசன், பி. சுசீலா, எஸ். வரலட்சுமி ஆகியோரும், விசுவநாதனும் அண்ணா பற்றிய பாடல்களைப் பாடினர்.

மாவட்டக் கழகத்தின் சார்பில், மாவட்டப் பிரதிநிதி பத்மனாபன், 'அண்ணா ஜோதி'யைக் கழகத் தலைவர் கலைஞரிடம் அளித்தார்.

இசை நிகழ்ச்சிக்குப் பின்னர் பொதுக்கூட்டம் துவங்கியது.

கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் தலைமை தாங்கினார்.

கழகத் தலைவர் கலைஞர் -- பொதுச்செயலாளர் நாவலர் -- துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் -- வேளாண்மைத் துறை அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி -- குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர்.

கூட்ட முடிவில் கலைஞர் எழுதிய 'உன்னைத்தான் தம்பி' நாடகம் நடைபெற்றது.

### கழகத் தலைவர் கலைஞர்

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவுகூர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'அண்ணன் பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறோம்; அண்ணன் பிறந்த நாள் -- பிறந்த நேரத்தில் சிறப்பான நாள் அல்ல; காஞ்சியில அவர் பிறந்தபோது அது சிறப்பான நாளாக யாராலும் கருதப்பட்டது கிடையாது.

அண்ணா பிறந்த நேரத்தில் தமிழகத்தில் எந்தவிதமான ஆச்சரியமோ, கதிரவன் திசை மாறி உதிக்கவோ — விண்ணில் நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறியோ ஓடி விடவில்லை; எந்தவிதமான புதுமைகளும், அதிசயங்களும் இந்தப் பூமியில் நடைபெறவில்லை.

ஆனால் அவர் மறைந்த நேரத்தில் -- அவருடைய நாற்பது ஆண்டுக் காலப் பணியின் காரணமாகப் பல மாற்றங்களைச் செய்துவிட்டு மறைந்தார்; அதனால்தான், அண்ணா பிறந்த நாளை இன்று புனித நாளாக -- தூய நாளாகக் கருதி -- நம்மையெல்லாம் இந்த நாளில் அர்ப்பணித்துக் கொண்டு -- மேலும் வீர சாதனைகளை ஏற்று -- சூளுரை மேற்கொண்டு, அவர் தந்த கொள்கையை -- காட்டிய இலட்சிய வழியைப் பின்பற்றுவதற்குத் தயார்படுத்திக் கொள்கின்ற

(4-ம் பக்கம் பார்க்க)

## கழகம் பெற்றிருக்கும் வலிவுக்குக் காரணம்

### கடமை உணர்ந்து செயலாற்றும் சக்தியைப் பெறுவது அவசியம்

சென்னை, செப். 18—

"சாதாரண செப்புக் கம்பிக்கு வலிமை இருப்பதில்லை, அதில் மின்சாரம் பாயும்போது மிகப் பெரிய இயந்திரத்தையும் மிக எளிதில் நகர்த்திவிடும் சக்தி அதற்கு உண்டாகிவிடுகிறது!

"காங்கிரசு ஆட்சியை அசைக்கின்ற அளவுக்குக் கழகம் பெற்றிருக்கும் வலிவுக்குக் காரணமே அண்ணா அவர்களால் நாம் பெற்ற எழுச்சி--உணர்ச்சி என்கின்ற மின்சாரம்தான்; இதை உணர்ந்து, மாவட்டக் கழகங்களும் -- வட்டக் கழகங்களும் -- கிளைக் கழகங்களும் கடமையைக் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் ஆற்றுவதன் மூலம்தான், 'நம்மை வெல்ல யாராலும் முடியாது' என்கின்ற சக்தியை வளர்த்துக்கொள்ள முடியும்."

--பொதுச்செயலாளர் நாவலர்

(அண்ணா பிறந்த நாள் விழாக் கூட்டத்தில்)

### சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில்

### அண்ணா பிறந்த நாள் விழா

## சிறப்புமிகு ஊர்வலத்தில் இரண்டு இலட்சம் பேர் அணிவகுத்த காட்சி

### முன்னணித் தலைவர்கள் பவனி

### தலைநகர மக்கள் திரண்டெழுந்து அண்ணனுக்கு விழா எடுத்த மாட்சி

சென்னை, செப். 18—

பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாள் -- கழகம் பிறந்த இருபத்து நான்காம் ஆண்டு ஆகியவைகளையொட்டி சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் நேற்று நடைபெற்ற ஊர்வலத்தில் இரண்டு இலட்சம் பேர் அணிவகுத்து வந்தனர்.

ஆர்வத்துடனும் எழுச்சியுடனும் நடைபெற்ற இந்த ஊர்வலம், சென்னையில் நடைபெற்ற ஊர்வலங்களுக்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல் இருந்தது.

ஊர்வலம் சென்ற வழிநெடுகிலும் இலட்சக்கணக்கில் மக்கள் திரண்டிருந்து ஆரவாரப் பேரொலி எழுப்பியவண்ணம் இருந்தனர்.

ஊர்வலத்தின் முற்பகுதி அண்ணா சாலையிலுள்ள பேரறிஞரின் சிலைக்கு அருகில் இருந்தபோது, கடைப் பகுதி ஊர்வலம் தொடங்கிய இடத்திலேயே இருந்தது; ஒரு குறிப்பிட்ட இடத்தை ஊர்வலம் கடந்து செல்வதற்கு இரண்டு மணி நேரம் ஆயிற்று.

அண்ணாவின் 64-வது வயதைக் குறிக்கும் வகையில், 64 அலங்கார வண்டிகள் அணிவகுத்துவந்தன; அவைகள், கழக அரசின் சாதனைகளை விளக்குவதாகவும் -- அண்ணன் வகுத்துத் தந்த அரசியல் அறநெறிகளை விளக்கும் வகையிலும் அமைந்திருந்தன,

(4-ம் பக்கம் பார்க்க)

# நெல்லையில் அண்ணா உருவச் சிலை

## முதலமைச்சர் கலைஞர் திறந்துவைத்தார்

### பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

திருநெல்வேலி, செப். 18—

திருநெல்வேலி சந்திப்பில் -- போர் நினைவு வளைவு இருந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா உருவச் சிலையை, செப். 15-ம் நாளன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவுக்கு கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனார் தலைமை தாங்கினார்.

விழாவில் நெல்லை மாவட்ட தி. மு. க. செயலாளர் அழகிய நம்பி, மதுரை மேயர் எஸ். முத்து, நெல்லைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பத்மநாபன், எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

### கூட்டுறவு வங்கிப் பொன் விழா மண்டபம் திறப்பு

நெல்லை மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கியில் ஏறத்தாழ ரூ. 1 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பொன் விழா மண்டபத்தை, முதலமைச்சர் கலைஞர் திறந்து வைத்தார்.

விழாவுக்கு கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனார் தலைமை தாங்கினார்.

விழாத் தொடக்கத்தில் கூட்டுறவுக் கொடியை நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் இராமச்சந்திரன் ஏற்றிவைத்தார்.

கூட்டுறவு மத்திய பாங்கி தலைவர் கோபால்சாமி வரவேற்றுப் பேசினார்.

துணைத் தலைவர் இலக்குமணன் முதல்வருக்கும் -- அமைச்சருக்கும் வாழ்த்து இதழ்கள் வாசித்துக் கொடுத்தார்.

### அண்ணா--கலைஞர் படத் திறப்பு

அண்ணா படத்தை மதுரை மேயர் எஸ். முத்துவும், கலைஞர் படத்தை எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி.-யும், நெல்லை மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கி பழைய தலைவர் சண்முக சுந்தரராஜா படத்தை மாவட்ட தி மு க. செயலாளர் அழகியநம்பியும், அமைச்சர் ஆதித்தனார் படத்தை முகவை மாவட்ட மத்திய வங்கித் தலைவர் தங்கவேலரும் திறந்து வைத்துப் பேசினர்.

கூட்டுறவு மத்திய பாங்கியின் சார்பில் கண் சிகிச்சை நிதிக்கு ரூ. 5,001 முதலமைச்சரிடம் கொடுக்கப்பட்டது.

### ஊழியர்களுக்குப் போனசு

பொன் விழா மண்டபத்தைத் திறந்து வைப்பதற்கு முன்னால், வாங்கியின் சார்பில் ஊழியர்களுக்குப் போனசுப் பணம் ரூ 40,000 மும், பாங்கியில் மேற்பார்வையாளராகப் பணியாற்றி திடீரென்று மரணமடைந்த இராமனின் மனைவி ருக்மணிக்கு உதவிப் பணமாக ரூ. 1,000-மும் முதலமைச்சர் வழங்கினார்.

### விழா மலர் வெளியீடு

பிறகு பொன் விழா மலரை முதலமைச்சர் வெளியிட்டு -- முதல் மலரை அமைச்சர் ஆதித்தனாரிடம் கொடுத்தார்.

அதன் பிறகு மண்டபத்தை முதல்வர் திறந்து வைத்தார்; மேடையில் வைக்கப்பட்டிருந்த ஒரு பொத்தானை அவர் அழுத்தியதும் -- பொன் விழா மண்டபத்தின் முன்பு உள்ள திரை விலகியது; அதில் அண்ணா படம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது.

### நகராட்சி வரவேற்பு-- அண்ணா சிலை திறப்பு

முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நெல்லை நகராட்சி சார்பில் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது; இதற்கான விழா நெல்லை நகரசபைப் பூங்காவுக்கு எதிரில் நடைபெற்றது.

விழாவுக்கு நகராட்சி தலைவர் சூரியநாராயணன் தலைமைதாங்கினார்; அவர் வரவேற்பு இதழை வாசித்து முதலமைச்சரிடம் கொடுத்தார்.

விழா மேடையில் இருந்த பொத்தானை அழுத்தி, நகராட்சிப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா சிலையைக் கலைஞர் திறந்து வைத்தார்.

### கண் சிகிச்சை நிதி

முதலமைச்சரின் கண் சிகிச்சை நிதிக்கு நெல்லை மாவட்டத்தின் சார்பில் ரூ. 2,05,950-க்கான காசோலையை மாவட்ட ஆட்சித் தலைவர் இராமசந்திரன் முதல்வரிடம் வழங்கினார்.

அமைச்சர் ஆதித்தனார், மேயர் எஸ். முத்து எம் எல் சி. ஆகியோர் பேசினர்.

### முன்னாள் போலீசுக்காரருக்கு முதலமைச்சர் நிதியுதவி

சங்கரன்கோவில் அருகேயுள்ள கல்பாலங்குளத்தைச் சேர்ந்தவரும் -- கால் ஒன்றை இழந்தவருமான பழைய போலீசுக்காரர் குமாரசாமிக்கு, விழாவில் முதலமைச்சரின் பொது நிதியிலிருந்து ரூ. 3000-ஐ கலைஞர் வழங்கினார்.

குமாரசாமி ஒரு கொலையாளியை பிடிக்கச் சென்றபோது வெட்டப்பட்டு கால் ஊனமானவர்.

### பாளையங்கோட்டையில் அண்ணா பிறந்த நாள் விழாப்பொதுக்கூட்டம்

திருநெல்வேலி மாவட்ட தி.மு.க. சார்பில் வ.உ.சி. திடலில் அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் மஸ்தான் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நெல்லை மாவட்ட தி.மு.க. செயலாளர் அழகியநம்பி தலைமைதாங்கினார்.

முதலமைச்சருக்கும் -- அமைச்சர் ஆதித்தனாருக்கும் மாவட்ட தி.மு.க. சார்பில் வரவேற்பிதழ்கள் படித்தளிக்கப்பட்டன; முதலமைச்சருக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

பல்வேறு அமைப்புக்களின் சார்பில் மலர் மாலைகளும் -- கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

திரு. இலட்சுமணன், எட்மண்டு எம்.எல்.ஏ., எஸ். டி. ஆதித்தன் எம்.எல்.சி., ஏ ஆர். சுப்பையா எம்.எல்.ஏ., சனார்த்தனம், கணேசன், கிருட்டினன், பத்மநாபன், மதுரை மேயர் எஸ் முத்து எம். எல்.சி., ஊராட்சி ஒன்றியச் சார்பில் தம்பிதுரை, சுப்பிரமணியம், அண்ணாமலை, ஆலடி அருணா எம்.எல்.ஏ., எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி., திருச்செந்தூர் சுப்பையா எம்.எல்.ஏ., அமைச்சர் சி. பா. ஆதித்தனார் ஆகியோர் பேசியபின், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்திப் பேசினார்.

# கிராமங்களுக்குக் குடிநீர் வசதி

புதுடில்லி, செப். 14—

கிராமப் பகுதிகளில் குடிநீர் வசதியைத் துரிதப்படுத்தும் மத்திய திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் 336 கிராமங்களில் குடிநீர்த் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

கிராமப் பகுதிகளில் குடிநீர் வசதியைத் துரிதப்படுத்துவதற்காக நாட்டின் பல பகுதிகளில் உள்ள 12,907 கிராமங்களை மத்திய அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது.

ஊருக்கு அண்மையில் குடிநீர் வசதி பெருமலிருக்கும் கிராமங்

(3-ம் பத்தி பார்க்க)

# கோவில்பட்டியில் குடிநீர்த் திட்ட அடிக்கல்நாட்டு விழா

கோவில்பட்டியில் ரூ 1,08,00,000 செலவில் திட்டமிடப்பட்டுள்ள குடிநீர்த் திட்டத்திற்கு முதலமைச்சர் கலைஞர் அடிக்கல் நாட்டினார்.

அன்றியும், நகராட்சிப் பள்ளி -- பேருந்து நிலையம் -- வாரச் சந்தை போன்ற 9 திட்டங்களுக்கும் முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

விழாவுக்கு, குடிநீர் வாரியத் தலைவர் செ. கந்தப்பன் எம்.எல் ஏ. தலைமைதாங்கிப் பேசுகையில், இத்திட்டம் 1973 ல் முடிவடையும் என்றும், இத்திட்டத்தின்மூலம் தாமிரபரணி ஆற்று நீர் கோவில்பட்டி மக்களுக்குக் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

திரு. வாங்கோ, ஆலடி அருணா எம்.எல்.ஏ., மதுரை மேயர் எஸ். முத்து, போக்குவரத்து அமைச்சர் எஸ் இராமச்சந்திரன், கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனார், வழக்கறிஞர் அழகியநம்பி ஆகியோரும் பேசினர்.

# திட்டங்களுக்கு மாநில முதலீடு

## ரூ. 1,400 கோடி

சென்னை, செப். 18—

ஐந்தாவது திட்டத்தின் மாநிலத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய திட்டங்கள் எவை என்பதை இத்திங்கள் இறுதிக்குள் மாநிலத் திட்டக் குழு அரசுக்குத் தெரிவித்துவிடும்.

மாநில திட்டக் குழுத் துணைத் தலைவர் எம். ஜி இராசாராம இதனைத் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"பல்வேறு பணிக் குழுக்கள் அனுப்பிவைத்துள்ள சிபாரிசுகளின் அடிப்படையில் இந்தத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படும் இந்தச் சிபாரிசுகள் திட்டக் குழுவின் அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துவிட்டன.

தற்போதுள்ள நிலவரப்படி, திட்டக் காலத்தில் மாநிலத் துறையில் மூதலீடு ரூ. 1,300 கோடியிலிருந்து ரூ. 1,400 கோடிவரை இருக்குமெனத் தோன்றுகிறது.

மாநில அரசு மாநிலத் திட்டக் குழுவுடன் ஆலோசனை கலந்து முடிவுகள் எடுத்த பிறகு, மத்திய திட்டக் குழுவுடன் விவாதிக்கும்."

# கொள்ளை இலாப வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

## ஏழை எளியவர்களிடம் அதிக விலை வாங்கினால் வழக்குத் தொடரப்படும்

### பண்டங்களின் நிர்ணய விலைகளை உறுதிப்படுத்தப் பரிசீலனை

புதுடில்லி, செப். 18—

பண்டங்களுக்கு அதிக விலை வாங்குவதை வழக்குத் தொடுப்பதற்குரிய ஒரு குற்றமாகக் கருதுவதற்கான நிலை ஏற்படக்கூடும்.

கொள்ளை இலாபமடிக்கும் வர்த்தகர்களுக்கு எதிராகத் தண்டனை நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும் வகையில் இவ்வாறு செய்யப்படலாம்.

விலைவாசி உயர்வைத் தடுப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் குறுகியகால நடவடிக்கைகளில் ஒரு அம்சமாக இந்த நடவடிக்கை பரிசீலிக்கப்படுகிறது.

உள்நாட்டு வர்த்தகம் -- சிவில் வழங்கு துறைகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பு வகிக்கும் தொழில் வளர்ச்சி அமைச்சகம் இந்த யோசனையைக் கூறியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இத்தகையதோர் நடவடிக்கையை எடுக்காவிட்டால் இன்றியமையாப் பண்டங்களை நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் வழங்கப்படுவதை உறுதி செய்வது இயலாததாகிவிடலாம் என்று இந்த அமைச்சகம் கருதுகிறது.

இத்தகையதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டால், அன்றாடக் கூலிபெறும் தொழிலாளர்களும் -- அவ்வப்போது வேலை செய்து கூலி வாங்கும் தொழிலாளர்களும் விலைவாசி உயர்வால் பாதிக்கப்படாமல், இன்றியமையாப் பண்டங்களை நிர்ணயமான விலைகளில் பெற முடியும் என்று கருதப்படுகிறது.

"இன்றியமையாப் பண்டங்கள் சம்பந்தமாகவும் -- பதுக்கல்காரர்கள், கொள்ளை இலாபம் சம்பாதிப்பவர்கள் ஆகியவர்களுக்கு எதிராகவும் மாநில அரசினரே நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாவர்; எனவே, இந்த நடவடிக்கைகளை இறுதியாக்குவதற்கு முன்பாக மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்க மத்திய அரசு எண்ணியிருக்கிறது.

# தமிழ்நாடு முழுவதிலும் வேளாண்மைப் பணி நிலையங்கள்


சென்னை, செப். 18—

தமிழ்நாடு முழுவதும் சங்கிலித் தொடர்போல 400 வேளாண்மைப் பணி நிலையங்களைத் தொடங்கத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கார்ப்பரேஷன் திட்டமிட்டிருக்கிறது.

மாநிலத்தில் உள்ள கிராமப் பகுதிகள் முழுவதிலும் 1972 நவம்பரிலிருந்து தொடங்கி படிப்படியாக 1974 இறுதி வரை இந்த 400 நிலையங்களும் தொடங்கப்படும்.

டிராக்டர்கள் வாடகைக்கு விடுதல்--டிராக்டர்கள் மற்றும் விவசாயச் சாதனங்களைப் பழுது பார்த்தல்--உரங்கள், பூச்சி மருந்துகள் விற்பனை செய்தல் ஆகிய பணிகளை இந்த நிலையங்கள் மேற்கொள்ளும்.

இது தவிர, பொறியியல் பட்டம் பெற்றவர்களுக்கும் -- டிப்ளமாதாரர்களுக்கும் வேலை தருவது இத்திட்டத்தின் மற்றொரு நோக்கமாகும்; அவர்களுக்கு 3 மாதம் பயிற்சியளித்து--அவர்கள் தேர்ந்தெடுக்கும் இடங்களில் வேளாண்மைப் பணி நிலையங்கள் தொடங்க வசதி செய்து தரப்படும்; அவர்களுக்கு வேண்டிய நிதி வசதியையும் பாங்கிகள் செய்துகொடுக்கும்.




# நகர்ப்புறச் சொத்துக்கு உச்சவரம்பு

## முதலமைச்சர் கலைஞர் நிலை விளக்கம்

மதுரை, செப். 16—

'நகர்ப்புறச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு விதிக்கும் பிரச்சினை, அனைத்திந்திய அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்; அந்தந்த மாநிலத்தின் நிலைமைக்கேற்ப அது செயல்படுத்தப்பட வேண்டும்; இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு இறுதியானதோர் முடிவுக்கு வந்திருப்பதாக நான் நினைக்கவில்லை"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கருத்தறிவித்தார்; திருச்சியில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும்-முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

### ஏதேதோ சொல்கிறார்--- பதில் சொல்வது அவசியமா?

கேள்வி:— "தமிழ்நாடு அரசாங்கத்தைப் பற்றித் தனக்கு ஏராளமான புகார்கள் வருகின்றன என்று, ஆளும் பொறுப்பில் இருப்பவர்கள், 'அரசாங்கம் தங்கள் கட்சிக்கு' என்று கருதாமல் 'பொதுமக்களுக்கு' என்ற நினைப்பில் பணியாற்ற வேண்டும்' என்றும் சுப்பிரமணியம் கூறியிருக்கிறாரே!"

பதில்:— "தமிழ்நாட்டில் அவர் (சுப்பிரமணியம்) கட்சியை வளர்ப்பதற்காக ஏதேதோ சொல்லிக்கொண்டு இருக்கிறார்; அதற்கெல்லாம் பதில் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன்."

### நகர்ப்புறச் சொத்துக்கு உச்சவரம்பு நிலை

கேள்வி:— "தமிழ்நாட்டில் நகர்ப்புறச் சொத்துக்கு உச்சவரம்பு கொண்டுவரப்படுமா?"

பதில்:— "அகில இந்திய அடிப்படையில் அது ஆராயப்பட்டு -- அந்தந்த மாநிலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்று; மத்திய அரசில் அது பற்றி ஒரு முடிவான கருத்துக்கு வந்ததாகத் தெரியவில்லை."

### ஊதியத்திற்கு உச்சவரம்பு

கேள்வி:— "அரசு ஊழியர்கள் கிளர்ச்சி நடத்தும்போதெல்லாம் ஊதிய உயர்வு கொடுக்கப்படுகிறது -- இதனால் விலைவாசி உயருகிறது -- வரி கொடுக்கும் பொதுமக்களை இது பாதிக்கிறது -- என்றெல்லாம் கருத்து நிலவுவதால் அரசு ஊழியர்களின் ஊதிய உயர்வுக்கு உச்சவரம்பு கொண்டுவரப்படுமா?"

பதில்:— "வரி கொடுக்கும் மக்களின் தேவைகளையும் நிறைவு செய்யத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்பதை சட்டமன்றத்தில் விளக்கியிருக்கிறேன்."

### நெசவாளர் பிரச்சினை

கேள்வி:— "தமிழ்நாட்டில் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை விற்பதற்கு மத்திய அரசிடம் உதவிப் பணம் கேட்டிருப்பதாக அமைச்சர் மாதவன் கூறியிருக்கிறாரே -- அதற்கு டெல்லியின் பதில் கிடைத்ததா?"

பதில்:— "இதுவரையில் இல்லை; கைத்தறியாளர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தனிக் குழு அமைத்திருக்கிறோம்; அந்தக் குழுவினர் தங்கள் பணியை விரைவில் முடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்; மேற்கொண்டும் தீவிர நடவடிக்கை வேகமாகச் செய்யப்படும்."

### சேதுக்கால்வாய்த் திட்டம்

கேள்வி:— "சேதுசமுத்திரத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று கோரினீர்களே -- அதற்குத் தலைமையமைச்சர் பதில் கூறினாரா?"

பதில்:— "அடுத்த முறை டெல்லி சென்றுபோது, இது பற்றித் தலைமையமைச்சருடன் பேசுவேன்."

கேள்வி:— "டெல்லி பயணம் எப்போது?"

பதில்:— "தேதி நிச்சயம் ஆகவில்லை."

### நின்றது பற்றி மகிழ்ச்சி

கேள்வி:— "இரயில்வேத் தொழிலாளர் வேலைநிறுத்தம் நின்றுவிட்டது."

பதில்:— "மகிழ்ச்சி."

### குறிப்பிட்டுச் சொன்னாரா?

கேள்வி:— "அரசாங்கத்துக்கு வரி பாக்கி கொடுக்க வேண்டிய பெரும் முதலாளிகள் வீட்டில் அமைச்சர்கள் விருந்து சாப்பிடுவதாகக் காமராசர் குற்றஞ்சாட்டி இருக்கிறாரே -- உங்கள் கருத்து என்ன?"

பதில்:— "அப்படி யார் வீட்டுக்குச் சென்றோம் என்று அவர் குறிப்பிட்டுச் சொன்னதாகத் தெரியவில்லை."

### விவரம் கிடைக்கவில்லை

கேள்வி:— "சேலம் இரும்பு ஆலை நிர்வாகத்தில் தமிழ்நாடு அரசுக்கும் பங்கு வேண்டும் என்று முன்பு கோரியிருந்தீர்களே -- அதற்கு மத்திய அரசு சம்மதித்ததா? இப்போது சேலம் இரும்பு ஆலைக்கு ரூ. 100 கோடி முதலீட்டில் மத்திய அரசு தனி நிறுவனம் தொடங்கியிருக்கிறதே!"

பதில்:— "சேலம் இரும்பு ஆலையில் மாநில அரசுக்கும் பங்கு தர வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம்; இப்போது தொடங்கியிருக்கும் நிறுவனம் பற்றிப் பத்திரிகையில் செய்தி படித்தேன் -- விவரம் கிடைக்கவில்லை."

### இதுவரையில் பதிலில்லை

கேள்வி:— "அரசுடைமையாக்கப்பட்ட பாங்கிகள் நிர்வாகத்தில் மாநில அரசுக்கும் பங்கு வேண்டும் என்று கேட்டிருந்தீர்களே -- பதில் வந்ததா?"

பதில்:— "கேட்டோம்; இதுவரையில் பதில் இல்லை."

# பெரியார் பிறந்த நாள்

## முதலமைச்சர் கலைஞர் மற்றும் அமைச்சர்கள் வாழ்த்து

திருச்சி, செப். 17—

திராவிடக் கழகத் தலைவர் தந்தை பெரியார் அவர்களின் 94-வது பிறந்த நாள் விழா, திருச்சி - புத்தூரில் உள்ள பெரியார் மாளிகையில் இன்று சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

நேற்று மாலை தந்தை பெரியார் அவர்களை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்துப் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

முதலமைச்சருடன் சென்றிருந்த அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம் -- எஸ். இராமசந்திரன் -- குடிநீர் வாரியத் தலைவர் செ. கந்தப்பன் -- திருச்சி மாவட்ட தி மு.க. செயலாளர் எம். எஸ் வெங்கடாசலம் -- பராங்குசம் எம்.எல்.சி. ஆகியோரும் தந்தை பெரியாருக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்

தந்தை பெரியார் உடல்நலம் பற்றிக் கலைஞர் விசாரித்தார்; நலமுடன் இருக்கிறேன்' என்று பெரியார் அவர்கள் கூறினார்.

பின்னர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்களும் நேற்று மாலை தந்தை பெரியார் அவர்களைச் சந்தித்து -- கைத்தறித் துணி அணிவித்துப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினார்.

இன்று காலையில் அமைச்சர்கள் க. அன்பில் தர்மலிங்கம் -- எஸ் இராமச்சந்திரன் ஆகியோர் பெரியார் அவர்களுக்கு மலர் மாலைகள் அணிவித்துச் சிறப்பித்தனர்.

மாலையில் அமைச்சர் க. இராசாராம் அவர்கள் பெரியாரைச் சந்தித்துப் பிறந்த நாள் வாழ்த்துக்கூறி மலர் மாலை அணிவித்தார்.

திருச்சி மாவட்ட கலெக்டர் பாரதி, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு, வட்டாரப் பொறியியல் கல்லூரி முதல்வர் மணிசுந்தரம், திருச்சி பெரியார் கல்லூரி முதல்வர் மணிசுந்தரம், முதல் மணியப்பா, பிஷப் ஹீபர் கல்லூரி முதல்வர் சர்குருதாஸ் ஆகியோரும் மலர் மாலைகள் அணிவித்து வாழ்த்துக் கூறினர்.

பெரியார் ஆசிரியர் பயிற்சி மாணவ--மாணவிகளும், பெரியார் நடுநிலைப் பள்ளி மாணவ -- மாணவிகளும் வரிசையாக நின்று பெரியாருக்கு மாலை அணிவித்தனர்; அவர்களுக்குப் பெரியார் இனிப்பு வழங்கினார்.

மாணவ -- மாணவிகள் ஊர்வலமாக வந்து, திருச்சி சந்திப்பில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

# காஞ்சியில் அண்ணா அரங்கு--- உருவச் சிலை திறப்பு

## கல்வியமைச்சர் நாவலர் பங்கேற்பு

காஞ்சிபுரம், செப். 16—

ரூ. 6 இலட்சம் செலவில் கட்டப்பட்ட அறிஞர் அண்ணா அரங்கை கல்வியமைச்சர் நாவலர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் நேற்று காஞ்சியில் திறந்துவைத்தார்.

இந்த அரங்குக்கு எதிரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவச் சிலையையும் நாவலர் திறந்துவைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் என். கிருஷ்ணமூர்த்தி ஏற்பாடு செய்துள்ள தீவிரக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தையும் அமைச்சர் துவக்கிவைத்தார்.

அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட 8 பேருக்குத் தலா ரூ 60 வழங்கினார்.

நகராட்சித் தலைவர் கே. டி. எஸ் மணி அமைச்சருக்கு வரவேற்புரை படித்தளித்தார்.

நகராட்சி ஆணையர் கே. அருணாசலம் அறிக்கை அளித்தார்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ. தலைமைவகித்தார்.

திரு. சி. வி. இராசகோபால் எம்.எல்.சி., திரு. கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர்.

நகராட்சித் துணைத் தலைவர் ஏ. சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

## ஜரிகைத் தொழிற்சாலை வருவது உறுதி

### நாவலர் நம்பிக்கை

காஞ்சியில், அண்ணா பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நெசவாளர்கட்குப் போனசு வழங்கு விழா நடந்தது.

போனசு வழங்கி, நாவலர் அவர்கள் பேசியதாவது:—

"இச்சங்கத்திற்குக் கிடைத்த ரூ. 18,000 இலாபத்தில் ரூ. 4,000 உபரி ஊதியமாக (போனசு) அளிக்கப்படுகிறது.

நெசவாளர்கள் இந்த ஊதியத்தைச் சங்கத்திற்கு மூலதனமாக--பங்காகப் போட்டுவைக்க வேண்டும்; அப்போதுதான் சங்கமும்--நெசவாளர்களின் வாழ்க்கையும் முன்னேற்றமடையும்.

காஞ்சியில் ஜரிகைத் தொழிற்சாலை எப்போது வரப்போகிறது என்று இங்கே கேட்டார்கள்.

ஜரிகைத் தொழிற்சாலை அமைப்புக் குழுவில் மாவட்டக் கலெக்டரும் உறுப்பினராக இருக்கிறார்; அதனால் அவரிடம் இதுபற்றிப் பேசினேன்.

காஞ்சிபுரத்தில் ஜரிகைத் தொழிற்சாலை வருவது உறுதி; தொழிற்சாலை அமைப்புக்கான வரைபடங்கள் போடப்பட்டு -- உரிய எஞ்சின்கள் வாங்குவது பற்றிப் பேச்சுவார்த்தை நடந்துவருகிறது."

திரு. காஞ்சி கல்யாணசுந்தரம் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் சி. வி. எம். அண்ணாமலை, கே. எம். இராசகோபால், மேலவை உறுப்பினர் சி. வி. இராசகோபால், நகராட்சித் தலைவர் கே.டி.எஸ். மணி, மாவட்டக் கூட்டுறவு அச்சகத் தலைவர் டி. சீனிவாசன், திருவள்ளுவர் பட்டு நெசவாளர் சங்கத் தலைவர் வெங்கடேசன் ஆகியோரும் பேசினர்.

(1-ம் பத்தித் தொடர்ச்சி)

களும் -- குடிநீரைச் சுத்தப்படுத்தி ஏழை எளிய மக்களுக்கு வழங்குவதற்கான வசதிகளற்ற கிராமங்களும் இதில் அடங்கும்.

கிராமப் பகுதிகளில் குடிநீர் வசதியைத் துரிதப்படுத்தும் திட்டத்துக்கு 1972—73-ல் ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; இதன்படி மாநில அரசாங்கங்கள் ஏற்று நடத்தும் ரூ. 37 66 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்காக மத்திய சுகாதார அமைச்சகம் முதல் தவணையாக ரூ. 4 12 கோடி அளித்திருக்கிறது.

# பள்ளிச் சிறுவர்களுக்கு இலவசமாக உடல் நலச் சோதனைத் திட்டம்

## தமிழ்நாடு அரசு ஏற்பாடு

### ஆண்டுதோறும் ரூ. 4 இலட்சம் செலவிடப்படும்

### நல்வாழ்வுத் துறை அமைச்சர் அன்பழகன் தொடங்கிவைத்தார்

சென்னை, செப். 16—

பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு இலவசமாக உடல்நலத்தைச் சோதனை செய்யும் திட்டம் ஒன்றைத தமிழ்நாடு அரசு தொடங்கியிருக்கிறது; இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாகச் சென்னை நகரில் முதலாவது -- ஆறுவது வகுப்புகளில் படிக்கும் மாணவ -- மாணவிகளுக்கு உடல் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; இந்தத் திட்டத்தால் சென்னை நகரிலுள்ள 1,20,000 சிறுவர்கள் பயன்பெறுவர்.

இந்தத் திட்டத்துக்காக ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ 4 இலட்சம் அளவுக்கு அரசு செலவிட இருக்கிறது.

சென்னை நகரிலுள்ள பொது மருத்துவமனை, ஸ்டான்லி -- இராயப்பேட்டை -- கீழ்ப்பாக்கம் -- எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனைகள். திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் பெண்கள் மருத்துவமனை ஆகியவைகளில் இதற்கென்று தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு -- இந்தப் பிரிவினர் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று சோதனை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாணவருக்கும் உடல் சோதனைக்காக தலா ரூ. 2.25 செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது; உடல்நலக் குறைவுள்ள மாணவர்களுக்கு மருந்து வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## அண்ணா விருப்பம் நிறைவேறுகிறது

இந்தத் திட்டத்தின் தொடக்க விழா, நேற்று மாலை சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

தொடக்க விழாவின் அறிகுறியாக 6 சிறுவர்களுக்கு மருந்துகளை வழங்கிப் பேசுகையில் அமைச்சர் அன்பழகன் அவர்கள் கூறியதாவது:—

"அண்ணாவின் 64-வது பிறந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடும் இந்த நாளில் இந்த விழாவும் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

குழந்தைகள் நலனுக்காக பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பிய அவரது பிறந்த நாளில், இந்தத் திட்டத்தின் தொடக்க விழா நடப்பது பொருத்தமான ஒன்றாகும்.

'வரும்முன் காப்பதே சிறந்தது' என்ற கருத்தின் அடிப்படையில் நோய்கள் வந்த பிறகு அவற்றுக்காக மருந்து சாப்பிடுவதைவிட நோய் ஏற்படாமல் தகுந்த தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதே சிறந்ததாகும்; அதுவும், நாட்டில் எதிர்காலத் தலைமுறையினரான பள்ளி மாணவர்களின் உடல் நலத்தைப் பரிசோதித்து -- நோய்களுக்கான அறிகுறி ஏதேனும் இருப்பின் தகுந்த மருந்துகளை அளித்து -- அவர்களைச் சிறந்த மக்களாக ஆக்குவது என்பது மிகவும் முக்கியமான கடமையாகும்.

பள்ளி மாணவர் உடற்நலச் சோதனைத் திட்டத்தை 1-வது வகுப்பு முதல் 6-வது வகுப்பு வரையிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் செயல்படுத்துவதற்காகத் திட்டமிட்டோம்; இப்படிச் செய்தால், சென்னை நகருக்கு மட்டும் ஆண்டுக்கு ரூ 50 இலட்சம் தேவைப்படுகிறது; இதைச் செய்ய இயலாத காரணத்தால், முதல் வகுப்பு -- 6-வது வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு இந்தத் திட்டம் கொண்டு வரப்படுகிறது.

இத்திட்டம்வெற்றிகரமாக செயல்பட டாக்டர்கள்--ஆசிரியர்கள்--பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும்."

விழாவுக்கு தமிழ்நாடு அரசு நலத்துறை செயலாளர் அம்பா சங்கர் தலைமை தாங்கினார்.

விழாவில் கலந்துகொண்டவர்களை மருத்துவ கல்வி இயக்குநர் என். ஆர். இரத்தினக் கண்ணன் வரவேற்றார்.

# பருப்பு வகைகள் பற்றுக்குறை-- மத்திய அரசு உணருகிறது

## ஏட்டளவிலுள்ள உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்த முன்வருகிறது

புதுடில்லி, செப். 18--

நாட்டில் பருப்பு வகைகளின் பற்றுக்குறையைச் சமாளிக்கவும் விலைவாசி உயர்வைத் தடுக்கவும், வெளிநாடுகளிடமிருந்து பெரும் அளவில் பருப்பு வகைகளை இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது; பர்மா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளிடமிருந்து இவை இறக்குமதி செய்யப்படும்.

பருத்தி வகைகளின் உற்பத்தி பெருகவில்லை; இவற்றின் உற்பத்தியைப் பெருக்குவது சம்பந்தமாக ஆராய்ச்சியை மேற்கொள்ளப்போவதாக சென்ற ஆண்டு விவசாய அமைச்சகம் அறிவித்திருந்தது; ஆனால் இன்னமும் அது ஏட்டளவிலேயேதான் உள்ளது.

பருப்பு வகைகள் சாகுபடி நடைபெறும் நிலங்களின் பரப்பு மாறியுள்ளது; இதற்குக் காரணம், 'பருப்பு வகைகளைவிட அதிக விளைச்சல் தரும் கோதுமை ரகங்களைப் பயிரிட்டால் நிறைய பணம் கிடைக்கும்' என்று அறிந்துள்ள விவசாயிகள் பருப்பு வகைகள் சாகுபடியை நிறுத்திவிட்டதுதான் என்று கூறப்படுகிறது.

சாதாரணமாக முக்கியப் பருப்பு வகைகள் ஏப்ரல் முதல் அக்டோபர் வரை பயிரிடப்படும்; ஆனால் இந்த ஆண்டில் பருவமழை தவறிவிட்டதால் பருப்பு வகைகள் விளைச்சல் நிறைய இராது என்று கருதப்படுகிறது.

கடலை எண்ணெய் நாட்டில் தயாராகும் அளவைவிட அதிகமாகத் தேவைப்படுகிறது; இந்தப் பற்றுக்குறையைச் சமாளிக்கப் பனை எண்ணெயை இறக்குமதி செய்வது என்றும் மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

உணவுக்காகப் பயன்படுத்தப்படும் எண்ணெய்கள் பொதுமக்களின் இன்றியமையாப் பண்டங்களில் ஒன்றாகும்; எனவே அவற்றின் விநியோகம் குந்தகப்படக்கூடாது என்றும் அரசு கருதுகிறது.

# மருந்தில் நஞ்சு கண்டுபிடிப்பு

## தமிழக அரசு தீவிரம்

### அமைச்சர் அன்பழகன் தகவல்

சென்னை, செப். 18—

"மருந்தில் நஞ்சு கலந்திருப்பதைக் கண்டுபிடிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது"

என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் தெரிவித்தார்; இதுபற்றி நிருபர்களிடம் அவர் கூறியதாவது:—

"பம்பாயைச் சேர்ந்த 'கெமோ பார்மா லேபரட்டரி' என்ற நிறுவனம் காய்ச்சலுக்காகத் தயாரித்திருந்த 'பிப்டால்' என்ற மருந்தில்--16109 என்ற பிரிவில் சிறிது நஞ்சு கலந்திருப்பதாகத் தமிழ்நாடு மருந்துக் கட்டுப்பாடு அதிகாரி கண்டுபிடித்துள்ளார்; இதன் காரணமாக எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் ஒரு குழந்தை இறந்திருக்கிறது.

ஆகவே, இந்தக் குறிப்பிட்ட எண் உள்ள 'பிப்டால்' மருந்தை உடனே தமிழகம் முழுவதும் கைப்பற்றவும் -- விற்பனைக்குத் தடை விதிக்கவும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

இந்தத் தகவலை மற்ற மாநிலங்களுக்கும், மத்திய அரசின் மருந்துக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கும் தெரிவித்து விட்டோம்; இதன் மீது தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன."

# கங்கை-காவிரி இணைப்புத் திட்டம்

## சமாளிக்க இயலாத சிக்கல்கள் ஏதும் இல்லை

### ஐ. நா. நிபுணர்கள் குழு கருத்தறிவிப்பு

புதுடில்லி, செப். 18—

"தேசிய நீர் வசதித் திட்டத்தின் ஓர் அங்கம்தான் கங்கை--காவிரி இணைப்புத் திட்டம்; இது பொறியியல் முறைப்படி இணைக்கக்கூடியதுதான்; இதை நிறைவேற்றக்கூடிய திறமை வாய்ந்த நிபுணர்கள் இந்தியாவில் இருக்கிறார்கள்; கங்கை--காவிரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதில் சமாளிக்க முடியாத சிரமங்கள் எதுவும் இல்லை; ஆனால் பல ஆண்டுகளுக்கு இதில் மேலும் மேலும் திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கும்; கங்கை--காவிரி இணைப்புத் திட்டத்துக்கு 20 ஆண்டுகளில் ரூ. 2500 கோடி செலவிட நேரிடலாம்" என்று ஐ.நா. நிபுணர்கள் குழு கருத்தறிவித்திருக்கிறது.

"இந்தியாவில் தேசிய நீர் வசதி இணைப்புத் திட்டம் அவசியம்தான்" என்று ஐ. நா. நிபுணர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

இரண்டாவது முறையாக, ஐ. நா. நிபுணர்களின் கருத்தை அறிய இந்தத் திட்டம் பற்றி யோசனை கேட்கப்பட்டது; அதற்குத்தான் அவர்கள் மேற்கண்டவாறு பதில் தெரிவித்திருக்கின்றனர்.

"கி.பி 2000 ஆண்டுவாக்கில் இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்திருக்கும்; அதனோடு தண்ணீர்ப் பற்றுக்குறை மிக அதிகமாக உணரப்படும்; அதைச் சமாளிக்க வேண்டுமானால் இந்தத் தேசிய நீர் வசதித் திட்டம் இன்றியமையாததாகும்" என்று நிபுணர்கள் குழு கூறியிருக்கிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அலங்கார வண்டிகளில் 64-வதாக அன்னப் பறவைபோல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தி வந்தது; அதில் கழகத் தலைவர் கலைஞர் -- பொதுச்செயலாளர் நாவலர் -- அமைச்சர்கள் என். வி. நடராசன், மன்னை ப. நாராயணசாமி, எஸ். ஜே. சாதிக் பாட்சா, மு. கண்ணப்பன், ஓ. பி. இராமன் ஆகியோரும் மற்றும் கழக முன்னணியினரும் அமர்ந்திருந்தனர்.

மூலகொத்தளத்தில் உள்ள தாளமுத்து--நடராசன் நினைவுச் சின்னத்திலிருந்து ஊர்வலம் மாலை 4-மணியளவில் புறப்பட்டது.

ஊர்வலத்தின் முன்பு அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்று சென்றது; சீரணித் தலைவர் என்.எஸ். நடராசன் கழகக் கொடியைப் பிடித்தவாறு யானைமீது அமர்ந்து வந்தார்.

அடுத்து, திரைப்பட நடிகர்கள் மு. க. முத்து—ஆனந்தன்—எம்.ஆர்.ஆர். வாசு ஆகியோர் குதிரைமீது வந்தனர்; இவர்களைத் தொடர்ந்து மேலும் சிலர் குதிரைகளில் வந்தனர்.

குதிரைப் படையைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கழகக் கொடியை ஏந்தியவாறு நடந்துவந்தனர்.

ஆயிரக்கணக்கானவர்கள் சைக்கிள்களில் வந்தனர்.

ஊர்வலத்தில் கரக ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், சிலம்பாட்டம், பழங்குடி மக்களின் மலைவாசி நடனம் ஆகியவை இடம்பெற்றிருந்தன.

சீரணித் தொண்டர்கள் வெள்ளைச் சட்டையும் -- வெள்ளைக் கால்சட்டையும் அணிந்து வந்தனர்.

அடுத்து பாண்டு வாத்தியக் குழு வந்தது.

பிறகு, அண்ணாவின் 64 வயதைக் குறிக்கும் வகையில் 64 அலங்கார வண்டிகள் வந்தன.

அதைத் தொடர்ந்து, 64 சைக்கிள் ரிக்ஷாக்களில் அலங்கரிக்கப்பட்ட அண்ணா படங்களைக் கொண்டு வந்தார்கள்.

ஊர்வலத்தில் கலந்துகொள்ளத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்தும் கழகத் தோழர்கள் பஸ்களிலும் -- லாரிகளிலும் வந்திருந்தனர்; அலங்கார வண்டிகளைத் தொடர்ந்து அந்த பஸ்களும், லாரிகளும் சென்றன; ஏராளமான சைக்கிள் ரிக்ஷாக்களும், ஊர்வலத்தில் கலந்துகொண்டன.

# கழகத் தோழர்கள் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்

சென்னை, செப். 18—

கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏதோ பணக்காரர்களின் ஆதிக்கம் இருப்பதாக வருத்தப்பட்டுப் பேசியிருப்பதாகப் பத்திரிகையில் படித்தேன்.

நான்கூட அதை ஓரளவுக்கு ஒப்புக்கொள்கிறேன்; ஏனென்றால், சில கேட்டுக்காரப் பணக்காரர்கள் நம்முடைய கழகத் தோழர்களையே அடித்துவிட்டு -- உதைத்துவிட்டு -- பிறகு அதிலே இருந்து தப்பித்துக்கொள்ளக் கழகத் தோழர்கள் சிலரையே சிபாரிசுக்குப் பிடிக்கிறார்கள்!

அப்படிப்பட்ட பணக்காரர்களிடம் நம்முடைய கழகத் தோழர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

--- கழகத் தலைவர் கலைஞர்

(கடற்கரைக் கூட்டத்தில்)

# சோழர் காலத்துச் செப்பு நாணயங்கள்

திருச்சி, செப். 18—

சோழர் காலத்தவை என்று கருதப்படும் 700 செப்பு நாணயங்கள் அரியலூருக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அரியலூரை அடுத்த கோவிந்தபுதூர் கிராமத்தில், கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் ஒரு கால்வாயை வெட்டிக் கொண்டிருந்தனர்; அப்போது பூமியிலிருந்து ஒரு பானை தோண்டி எடுக்கப்பட்டது; அந்தப் 'புதையலை' திறந்து பார்த்தபோது அதில் 700 நாணயங்கள் இருந்தன; அவை, 'சோழ மன்னர்களின் காலத்தவை' என்று நம்பப்படுகிறது.

# தோட்டிகளுக்குப் புதிய பெயர்

பெங்களூர், செப். 16—

"தோட்டிகளும் -- குப்பைகள் கூட்டுவோரும் இனிமேல், 'நகராட்சி ஊழியர்கள்' என்றே அழைக்கப்படுவர்"

என்று, மைசூர் நகராட்சித் துறை அமைச்சர் பசவ லிங்கப்பா இங்கு தெரிவித்தார்.

செப். 7, 8-ம் நாட்களில் டில்லியில் நடைபெற்ற நகராட்சி நிர்வாக அமைச்சர்களின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

# சேலத்தில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா:

## 20--9--72

**சேலம்--2**

அண்ணா பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் காலை 10 மணிக்கு சேலம் பி. ஏ. சிதம்பரம் குழுவினரின் கிளாரினெட் இசை; வரவேற்புரை; க. அன்புமணி; தலைவர்: வே. ஆறுமுகம்; கொடியேற்றுதல்: எஸ். ஏ. அன்புக்கரசு; அரங்கு திறந்துவைத்தல்: கே. குப்பமுத்து; அண்ணா படத் திறப்பாளர்: இரா. இராசன்; இனிப்பு வழங்குதல்: எம். நடராசன், ஆர். நாராயணன், பொ. நடராசன்; நன்றியுரை: ஏ. கண்ணையன்.

மாலை 6-மணி: நாதசுர இசை; 6-30 மணிக்கு அண்ணா கவியரங்கம்; வரவேற்புரை: பி. சண்முகம்; தலைவர்: புலவர் வைத்தியலிங்கம்; பாடுவோர்: புலவர் இளையநம்பி, கவிஞர்கள் ஆட்லரசு, அன்னையன்பன், குறிஞ்சில்தாசன்.

இரவு 7-30 மணிக்கு கலா நிகழ்ச்சி; தலைவர்: வி. எஸ். நாராயணன்; தென்னகம் கலைக் குழுவினர் அளிக்கும் குமாரி விஜயா குழுவினரின் 'அண்ணா இருக்கின்றார்' என்னும் கதாகாலட்சேபம் நடைபெறும்; நன்றியுரை: எஸ் அங்கண்ணன்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாளாக இந்த நாளை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

அண்ணா பிறந்தார் -- வாழ்ந்தார் -- ஏதோ எழுதினார் -- பேசினார் நாவன்மை படைத்திருந்தார் என்ற அளவோடு தம்முடைய வாழ்க்கையை அவர் முடித்துக் கொள்ளவில்லை.

தாம் பெற்றிருந்த எழுத்தாற்றலை -- நாவன்மையை -- உடல் உழைப்பை -- வாழ்நாளில் பெரும் பகுதியை இந்தச் சமுதாயத்திற்காக அவர் அளித்தார்.

**நெல்லையில் பேரறிஞர் அண்ணா சிலையைத் திறந்து வைத்தபோது நான் சொன்னேன் --**

**தூங்கிக் கிடந்த தமிழினத்தினைத் தட்டி எழுப்பிக் கண்ணைத் திறந்தார்!**

**ஏங்கிக் கிடக்கிற ஏழைகளின் குரலைக் கேட்கக் காதைத் திறந்தார்!**

**இன இழக்கம் செய்வதற்கு தன் வாயைத் திறந்தார்!**

**என்போன்ற தம்பிமார்களை அமர வைக்கத் தன் இதயத்தைத் திறந்தார் -- அவர் சிலையை நான் திறக்கிறேன் என்று குறிப்பிட்டேன்.**

இப்படி அவருடைய ஒவ்வொரு அங்க அசைவும் இந்த இனத்திற்காக -- இந்த மண்ணின், மக்களின் மேன்மைக்காக -- தாயகத்தின், தமிழ் மொழியின் வளத்திற்காக -- வளர்ச்சிக்காக 'இந்தப் பூமி ஒளிமயமாகத் திகழ வேண்டும்' என்ற கவலைக்காக அவருடைய பணி -- பயணம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்படிப்பட்டவருடைய விழாவை நாம் எடுக்கின்ற நேரத்தில், அவரால் உருவாக்கப்பட்ட ஆட்சியைத் தொலைத்துவிடச் சிலர் மூலைகளில்பதுங்கி, 'நேரம் கிடைக்காதா' என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மக்கள் நன்கு அறிந்துகொண்டிருக்கின்றனர்."

## நடக்க இருப்பவை

# அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

## 19--9--72

**மாயூரம்**

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு நகரப் பூங்காவில் -- மாணவர் சாரங்கபாணி அரங்கில்; தலைவர்: எம். அப்துல் ஹாதி; பேசுவோர்: அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், செ. கந்தப்பன் எம்.எல்.ஏ., பி. வெங்கட கிருஷ்ணன், இரா. இராசமாணிக்கம், கோ. இராசன், மாயூரநாதன், கே. செல்லப்பன், இரா. நாராயணசாமி. (இரவு 8 மணிக்கு வி. சங்கையன் தலைமையிலும் -- வி. புருஷோத்தமன் முன்னிலையிலும் மணி--சாமி குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

**பண்ணுருட்டி**

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு கடலூர் சாலை அண்ணா திடலில்; தலைவர்: ஆர். நாகராசன்; முன்னிலை: ஜே. தருமாஞ்சலு, என். கோபால்தாஸ், எஸ். சக்கரபாணி எம்.சி., ஆர். சுந்தரமூர்த்தி, ஏ.எல்.எஸ். மணி, ஓ.ராமசாமி; பேசுவோர்: இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி., ஏ. மணி, ஆர். தண்டபாணி, டி. முனுசாமி, என். தங்கராசு எம்.சி., டி. ஆர். பழனிச்சாமி, எஸ். கோவிந்தராசுலு எம்.சி., கே. தட்சணாமூர்த்தி எம்.சி., ஆர். எஸ். மணி எம்.சி., ஆர். எம். கிருஷ்ணன் எம்.சி., எஸ். அப்துல் வாகீது.

**புதுக்கோட்டை**

நகர தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு திலகர் திடலில்; தலைவர்: எஸ். ஏ. ஆதிமூலம்; பேசுவோர்: நன்னிலம் நடராசன், காமராஜ்தாசன் (காங்கிரஸிலிருந்து விலகியவர்), அ. தியாகராச காடுவெட்டியார் எம்.எல்.ஏ., க. வீரையா எம்.பி., அ. பெரியண்ணன், க. சிங்கமுத்து, ந. மீனாட்சிசுந்தரம், வா. செழியன் எம்.சி., கோ. சீனிவாசன், மற்றும் பலர். (அன்று பகல் 12 மணியளவில் டவுன் ஹாலில் 5,064 ஏழைகட்கு உணவு வழங்கப்படும்.)

**கரம்பக்குடி**

நகர தி.மு.க. மற்றும் துணை மன்றங்களின் சார்பில் மாலை 6 மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: கு. தவசி; பேசுவோர்: க. அன்பரசன், காளிராசன், மற்றும் பலர்.

**தர்மபுரி**

அண்ணா மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு அண்ணா மன்றம் அருகில்; தலைவர்: டி. கே. இராசகோபால்; பேசுவோர்: வெ. கண்ணன், ஆர். சின்னசாமி எம்.எல்.ஏ., கே. பெரியசாமி, ஏ. எம். அப்துல்காதர், டி. ஏ. கோவிந்தன் எம்.சி., எம். என். நரசிம்மன், த. வே. வடிவேலன், பெ. பெரும்பாக்கன், எம். கந்தசாமி, டி. எஸ். சண்முகம், தேவன்.

**கரம்பக்குடி**

நகர தி.மு.க. மற்றும் துணை மன்றங்களின் சார்பில் மாலை 6 மணிக்கு அம்புக் கோவில் அண்ணா திடலில்; பேசுவோர்: திருப்பத்தூர் இராமமூர்த்தி மற்றும் பலர்.

**அம்மாபேட்டை**

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: மு. ஜெகபர்; பேசுவோர்: நள்ளாறு-நடராசன், ந. தமிழ்க்காவலன், ந. சோமசுந்தரம் எம்.எல்.சி., ந. சாமிநாதன், பா. சா. பார்த்தசாரதி, துரை. கிருட்டிணமூர்த்தி, மா. மாரிமுத்து, பி. எஸ். நாராயணன், முத்துமாணிக்கம்.

மாலை 6 மணிக்கு எம். முத்துக் கிருட்டிணன் தலைமையில் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளுடன் அண்ணா படம் ஊர்வலம் பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும்.

**அம்புக்கோவில்**

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு கலைஞர் திடலில்; தலைவர்: கே. வி. சுப்பையா எம். எல். ஏ.; முன்னிலை: கே. வீரையா எம்.பி.; பேசுவோர்: திருப்பத்தூர் இராமமூர்த்தி, அ. பெரியண்ணன், சிவ. பாலகிருஷ்ணன், இரா. தங்கமணி, ரெ. இராமமூர்த்தி, கோ. சக்கரபாணி, எஸ். முத்துச்சாமி அய்யர், த. கருப்பையா.

**அரும்பாவூர்**

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு அண்ணா திடலில்; வரவேற்புரை: செ. செங்கமலை; தலைவர்: பெ. பெரியசாமி; முன்னிலை: அ. மூ. இராமசாமி; பேசுவோர்: நன்னிலம் நடராசன், ஜே. எஸ். இராசு எம்.எல்.ஏ., ஆ. துரைராசு எம்.பி., மு. அட்சயகோபால், எஸ். செல்லக்கரும்பண்ணன், பி. எஸ். அம்மாயிரம், ந. உலகநாதன், மு. துரைசாமி, பி. ஆர். ரெங்கசாமி, கணபதி, கி. இராசகோபால், இமயவரம்பன், வைத்தியநாதன், மாரிமுத்து, சீத்தாராமன், இராமசாமி, பொ. தங்கவேல், ஏ. எஸ். அத்தியப்பன், பஞ்சரத்தினம்.

## 20--9--72

**மாயூரம்**

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு நகரப் பூங்காவில் -- மாணவர் சாரங்கபாணி அரங்கில்; தலைவர்: எஸ். என். குருமூர்த்தி எம்.சி.; பேசுவோர்: திருவாரூர் கே. தங்கராசு, கோ. சி. மணி எம்.எல்.சி., வீ. கோவிந்தசாமி, கே. பூராசேந்திரன், சி. கலியபெருமாள், ஏ. வைத்தியநாதசாமி, கோ. சீனிவாசன், என். ரெகுபதி, அ. பாலசுப்பிரமணியன், கோ. பெருமாள்.

# சங்ககிரியில் அண்ணா பிறந்த நாள் விழா

செப். 19-ந் தேதி காலையில் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாள் விழா நினைவாகப் பள்ளிக் குழந்தைகளுக்கு 64 கரும்பலகைகளும் -- 64 எழுதுகோலும் வழங்கப்படும்; மாலை 6-மணிக்கு முருகு பாண்டியன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

# ஆதரவற்றவர்கட்கு பாதுகாப்பு

புதுடில்லி, செப். 18—

சமூகத்தில் நிர்க்கதியாய் இருப்பவர்கட்கு உதவி செய்வதற்காக மத்திய அரசு ரூ. 758 கோடி திட்டம் ஒன்றைத் தயாரித்துக்கொண்டிருக்கிறது.

பொது நலப் பாதுகாப்பு -- என்னும் இத்திட்டம் செயல்படும் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் இந்தத் தொகை செலவிடப்பட்டுவிடும்.

எந்த வருமானமும் இல்லாத வயோதிகர்கள் -- அனாதைக் குழந்தைகள், -- வருமானம் இல்லாத விதவைகள் -- உடல் ஊனமுற்றவர்கள் ஆகியவர்கட்கு இந்தத் திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]